# செம்மண்

நிலம் 3 துகள் 146 வள்ளுவர் ஆண்டு 2052, 06 - 12 வைகாசி 2023 வாரமலர் பக்கங்கள் 18







நியூட்டன்

## பழைய சட்டம் பாதுகாக்கப்பட்டது...?

**இது ஒரு கதை...**

ஓர் ஊரில் ஒரு விவசாயி இருந்தார். அவரது கோடரியின் பிடி உடைந்து விட்டது. பிடி போடுவதற்காகப் பிடிக்கு ஏற்ற முதிரை மரத் தடி ஒன்றையும் தனது கோடரியையும் எடுத்துக்கொண்டுபோய்த் தனக்குத் தெரிந்த ஆசாரி ஒருவரிடம் பிடிபோட்டுத் தருமாறு சொல்லிக் கொடுத்தார். கத்தி ஒன்றுக்குப் பிடி போடுவதற்கு அந்த ஆசாரிக்கு ஏற்கனவே முதிரைத் தடி ஒன்று தேவையாக இருந்திருக்கிறது. பிடி போடுவதற்குச் சற்றுக் காலம் தேவை என்று கூறிய ஆசாரி அந்த விவசாயிக்குக் குறித்த நாள் ஒன்றை அறிவித்து அந்த நாளில் வந்து கோடரியைத் திரும்பப் பெற்றுச் செல்லுமாறு சொல்லி அவரை வீட்டுக்கு அனுப்பி வைத்தார். பின்னர், பிடி போடக் கொடுத்த விவ சாயி வழங்கிய முதிரைத் தடியில் தனது கத்திப் பிடிக்கு அளவான துண்டை வெட்டி எடுத்துப் பிடி போட்டுக் கொண்டார். பின்னர் எஞ்சிய பகுதியையும் விவசாயியின் கோடரியையும் இன்னோர் ஆசாரியிடம் கொண்டுபோய்க் கொடுத்துக் கோடாரிக்குப் பிடி போட்டுத் தருமாறு சொல்லி வைத்தார். குறிப்பிட்ட நாள் வந்ததும் பிடி போடக் கொடுத்த விவசாயி வந்தபோது அவரை அழைத்துக்கொண்டு பிடி போடக் கொடுத்த மற்றைய ஆசாரியிடம் சென்றார். அந்த ஆசாரி பிடியைப் போட்டுக் கோடரி யைத் தயாராக வைத்திருந்தார். அந்தக் கோடரியை எடுத்துத் தனது கையால் சாண் கணக்கில் அளந்த முதலாவது ஆசாரி, "இந்தப் பிடி சற்று நீளமாக இருக்கிறது இதில் ஒரு 6 அங்குலம் வரையில் நறுக்கித் தாருங்கள்" என்று பிடிபோட்ட ஆசாரியிடம் விவ சாயிக்கு முன்பாக வைத்துக் கூறி னார். ஏற்கனவே பிடி கட்டையாக இருப்பதை உணர்ந்துகொண்ட

விவசாயியோ, "இல்லை இல்லை அதை வெட்ட வேண்டாம். இதுதான் கணக்காக இருக்கிறது" என்று தடுத்தார். பின்னர் எதுவும் சொல்லாமல் கோடாரியை வாங்கிச் சென்றார். இந்தக் கோடரிப் பிடிக் கதையை வாசிக்கும்போது சிறுபிள்ளைத்தனமான கதையாக இருக்கிறதே என்று எப்படி உங்களுக்குச் சிரிப்பு வருகிறதோ அதேபோல்தான் பழைய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நடைமுறைப் படுத்திய கதையும் உள்ளது. ஆனால், அது எமக்குச் சிரிப்பளிக்கவில்லை. அவ்வளவுக்கு அந்த விவசாயியைப் போல கன கச்சிதமாக ஏமாற்றப்பட்டிருக்கிறோம் நாம்.

**கோரிக்கைகளும் எதிர்ப்புகளும்**

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன, இறுதிப் போரில் முறைகேடுகள் நடந்திருக்கின்றன, ஆட்கடத்தல்கள், ஊடகவியலாளர்கள் படுகொலைகள் என வேண்டப்படாத விடயங்கள் பல இலங்கையில் நடந்துள்ளன. அவற்றுக்கு ஆதாரமாகவிருந்தது பயங்கரவாதத் தடைச்சட்டமே. எனவே அது நீக்கப்படல் வேண்டும் என்ற கண்டனங்கள் உள்நாட்டிலும் பன்னாட்டு அரங்கிலும் எழுந்திருந்தன. பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரனும், சாணக்கியனும் அவரவர் ஆதரவாளர்களும் நாடு தழுவிய ரீதியில் 2 தடவைகள் போராட்டங்களைக்கூட முன்னெடுத்திருந்தனர். இதனால் ரணில் அரசு ஏற்கனவே இருந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலான சட்டம் ஒன்றை முன்வைத்தது. அந்தச் செய்கையானது கோடரிப் பிடியில் கத்திக்குப் பிடி வெட்டிய கதையாகவும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் மாற்றம் கொண்டுவரத் தேவையில்லை, ஏற்கனவே இருந்த சட்டமே பரவாயில்லை என்று பழைய சட்டத்தை ஆதரிக்கும் அபிப்பிராயத்தை ஏற்படுத்தியிருக்கிறது.




**புதிய சட்டத்தைத் தமிழர் எதிர்க்கத் தேவையில்லை**

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் சிங்களவருக்கும் பாதிப்பாக இருப்பதால் அதை அவர்கள் முழு மூச்சாக எதிர்ப்பார்கள். இதனால், தமிழ் முஸ்லிம் தலைவர்களும் மக்களும் மௌனமாக இருந்தாலே போதுமானது. ஆனால், அதற்கு மாறாக இதை வைத்தே தமது தேய்ந்துபோன அரசியலை சிறுபான்மைக் கட்சிகள் மீளக் கட்டியெழுப்ப முனைகின்றன. பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர்கள் இந்தச் சட்டத்தைத் அதைத் தமக்கு ஏற்றபடி சீர் செய்து கொள்வர். அதற்காக அவர்கள் முன்னெடுக்கப் போகும் நாடாளுமன்ற வாக்கெடுப்பிலோ பொதுத் தேர்தல்களிலோ சிறுபான்மையினரின் வாக்குகள் எவ்வித செல்வாக்கையும் செலுத்தப் போவதில்லை. சிறுபான்மையினரின் வாக்குகளுக்குச் சிங்கள மக்கள் பயப்பிட வேண்டிய தேவையும் இல்லை. சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம்கள் தமக்குள் முரண்படாது முழு அளவில் எதிர்த்தால்கூட சாத்தியப்படாத விடயம் ஒன்றுக்காக ஒன்றுபடாது எதிர்ப்பது அடிப்படைக் கணித அறிவு கூடத் தெரியாமல் சிறுபான்மை மக்கள் இருப்பதையே காட்டுகிறது.

**மகா சங்கத்தினரின் அறிவிப்பு**

இலங்கை அரசியலில் எந்தத் திட்டமாகவோ சட்டமாகவோ இருந்தாலும் இறுதித் தீர்மானம் எடுப்பவர்கள் பௌத்த பீடத்தினரே. புதிய பயங்கரவாதத் எதிர்ப்புச் சட்டம் பற்றி அஸ்கிரிய, மல்வத்த பீடங்கள் கருத்துரைக்கும்போது, பிரச்சினையாகவுள்ள சரத்துக்களை நீக்கிவிட்டு அமுல்படுத்துங்கள் - என்றுள்ளன. கட்டையான கோடாரிப் பிடியை இதுதான் அளவான பிடி என விவசாயி ஆசாரியிடம் வாங்கிச் சென்ற கதைபோல ஏற்கனவே நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் முன்பு இருந்தவாறே நடைமுறையில் இருக்கவே வாய்ப்புண்டு. 1979இலிருந்து நடைமுறையிலிருக்கின்ற சட்டம்தானே என அதைப் பொதுமைப்படுத்தவும் வாய்ப்புண்டு.

அத்தோடு புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் சரத்துகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுச் சிறுபான்மையினருக்குப் பாதிப்பான விடயங்கள் நீக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டால் அதைச் சிங்கள ஆட்சியாளர்கள் மீற மாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கூட இல்லை. அப்படியிருக்கையில் அதற்காக அலட்டிக்கொள்வதில் எவ்வித பயனும் இல்லை. நாட்டை ஆள்வதற்கு அவர்களைப் பொறுத்தவரை ஏற்கனவே இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டமே போதுமானது. அதைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி வருவதற்கு அவர்கள் இதைப்போன்ற பல மாற்று நாடகங்களை மேடையேற்றவே செய்வர். நடப்பதும் - நடந்ததும் அதுவே.



தர்மராசா

# சிறைக்குள்...

## சிறை ஊழியர்களைப் பயன்படுத்தும் கைதிகள்

களுத்துறையில் நடைமுறையிலிருந்த தலைமயிர் வெட்டும் விதத்தால் அங்கிருந்த ஏழைக் கைதிகள் பலர் பாதிக்கப்பட்டனர். அவர்கள் தலைமையிர் வெட்டுவது சிரமாக இருந்தது. பூசாவிலிருந்து வந்த கைதிகள் அந்தச் சூழலைப் பார்த்துவிட்டு ஒரு முடிவெடுத்தனர். அருள் என்ற கைதி கத்தரிக்கோல் ஒன்றைச் சிறை ஊழியர்களுக்கூடாகக் களவாக வாங்கினார். அங்கிருந்த பிரபல தலைமயிர் வெட்டுக்காரனான மென்சனிடம் அதைக் கொடுக்க மென்சன் எந்த நேரமும் அதை இடுப்பில் செருகிக் கொண்டு சுற்றித் திரிந்தார். அவ்வாறு சுற்றித் திரியும்போது தலைமயிர் வளர்ந்த கைதிகளைக் கண்டால், "ஏன் தலைமயிர் வெட்டவில்லை?" என்று வினாவி இன்றைக்கு இந்த வாட்டில் வெட்டவிருக்கிறேன் வாருங்கள் என்று அறிவித்தலும் வழங்கிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இதனால் அதுவரை அங்கு தலைமயிர் வெட்டி உழைத்துக்கொண்டிருந்த இரண்டு கத்திரிக்கோல்களும் வேலையிழந்தன.

அனுராதபுரச் சிறைக்குள் வியாபாரம் செய்துகொண்டிருந்த ஓர் அரசியல் கைதி (லொறிச் சாரதி) விடுதலையாகிச் சென்றபோது 150க்கு மேற்பட்ட சன்லைற் சவர்க்காரங்களை வெளியில் எடுத்துச் சென்றார். சிறைக்குள் குறைந்த விலையில் வாங்கிய அவற்றுக்கு வெளியில் நல்ல விலை கிடைத்திருக்கும். இவ்வாறாகச்

**கைதிகளுக்குப் பொருள்களை வாங்கி வருவோரை, கடிதங்களைக் கொண்டுபோய்ப் போடும் சிறைச்சாலை ஊழியர்களை கப்பல் என்று சொல்வதுண்டு**

சிறையில் தரகர் வேலை செய்து பலர் சம் பாதித்துக்கொண்டிருந்தார் கள். ஒரு கடிதத்தைச் சிறைச்சாலை நிர்வாகத்துக்குத் தெரியாமல் கள வாக அனுப்ப வேண்டுமானால் பத்து ரூபா அல்லது ஒரு சிகரெட் எனப் பலரிடம் கடி தங்களையும் கையூட் டையும் வாங்கிப் பின் அவற்றை ஒன்றாகச் சேர்த்துச் சிகரெட் அல் லது பணத்தைக் கொடுத்துச் சிறை ஊழி யர்களைக் கெண்டு அவற்றை அனுப்ப வழி செய்யும் முகவர் வேலை யைச் செய்து பலர் உழைத்துக் கொண்டிருந்தனர். இதனால் தினமும் கொஞ்சக் காசு உழைப்பார்கள். அதே போல வெளியிலிருந்து ஏதாவது பொருள்களை வாங்கி எடுக்க வேண் டுமானால் அதற்கு ஒரு விலை வைத் துக் கைதிகளிடம் காசு வாங்கித் தமக்குத் தெரிந்த சிறைச்சாலை ஊழியரிடம் கொடுத்துப் பொருளை வாங்கி அதை இரண்டு மடங்கு விலைக்குக் கொடுப்பார்கள்.

அவ்வாறு கைதிகளுக்குப் பொருள் களை வாங்கி வருவோரை, கடிதங்க ளைக் கொண்டுபோய்ப் போடும் சிறைச்சாலை ஊழியர்களை கப்பல் என்று சொல்வதுண்டு. அவர்கள் சில குறிப்பிட்ட பகுதிக்கு வேலைக்கு வந்ததும் இன்னாருக்குச் சொந்தமான கப்பல் வந்துவிட்டது என்று கூறிக் குறிப்பிட்ட தரகரிடம் விடயத்தைக் கூறினால், உடனே உரிய அலுவலர் மூலமாக அவர் அதைச் செய்து கொடுப்பார்.

இவ்வாறு பல முகவர்களும் அவரவருக்கென்று பல கப்பல்களும் இருந்தன. இதனால், ஒவ்வொரு வர்களுக்கிடையேயும் போட்டிகள் நிலவின. கப்பல்கள் பற்றிய தகவல் கசிந்து குறிப்பிட்ட சிறைச்சாலை ஊழியர் பொருள்களைக் காவிக் கொண்டு வெளியே போய் வரும் போது திடீர் உடற்பரிசோதனை செய்து அவரிடம் உள்ள பொருள்கள் பறிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் நடந் தன. அதன் பின்னர் குறிப்பிட்ட ஊழி யர் அந்தப் பகுதிக்குக் கடமைக்கு நியமிக்கப்பட மாட்டார். தண்டிக்கும் வகையில் எங்காவது தூர இடத்தில் கடமை வழங்கப்படும். இவ்வாறு ஒரு கப்பல் அடிபடும்போது மற்ற முக வருக்கு அது சாதகமாக அமையும்.

உதாரணமாக 50 முத்திரைகள், கடித உறைகள் ஒருவரிடம் பிடிபட்டால் உள்ளேயுள்ள மற்ற வியாபாரி அவற் றுக்கான விற்பனை விலையைக் அதிகரித்து விடுவார். இவ்வாறான சம்பவங்கள் நடக்கும்போது கப்பல் அடிபட்டு விட்டது என்பார்கள். உள்ளே வியாபாரம் செய்பவர்களுக் கிடையில் கருத்து முரண்பாடுகளும் சண்டைகளும் காட்டிக்கொடுப்புக ளும் அதிகரிக்கும்.

சிலவேளை இரு வியாபாரிக ளுக்கிடையிலும் முரண்பாடுகள் இருக்கும்போது அதிகளாவான பொருள்களை வைத்திருப்பவர் பற் றிய விவரத்தை எதிரானவர் தமக்கு இனக்கமான அதிகாரிகளுக்கு அறி வித்து அந்த இடத்தில் திடீர்ச்சோ தனை நடத்தி அந்தப் பொருள்கள் அனைத்தையும் சிறைச்சாலை ஊழியர்கள் எடுத்துச் செல்வதும் நடக்கும்.

இதற்காகப் போகம்பரையில் முதல் நாள் பின்னேரம் தங்களிடமுள்ள பொருள்களைக் குறைந்த விலைக் காவது விற்பார்கள். விற்றவர்கள் விற்றபின்னர் அன்று மாலையில் சிறைச்சாலை ஊழியர்களுக்கு அறிவித்துக் குறிப்பிட்ட அறைகளில் இவ்வாறான பொருள்கள் இருக்கின் றன என்று சொல்லி மறுநாளே திடீர்ச் சோதனை நடத்த வைத்து அந்தப் பொருள்கள் கைப்பற்றப்படும். அந் தப் பொருள்களை சிறைச்சாலை ஊழியர்கள் மூலம் மீண்டும் திரும்பப் பெற்று மீண்டும் சுழற்சி முறை வியாபாரம் நடக்கும். இந்த ஏற்றுமதி - இறக்குமதி வேலைகளுக்குச் சிறை ஊழியர்களையே கைதிகள் பயன் படுத்துவர்.

(தொடரும்)

# நறுக்கு

**இந்த வாரச் சொல்**

யாழ்ப்பாணத்தவரின் பேச்சு வழக்கில் பெயர்ச் சொல்லாகவும், வினைச்சொல்லாகவும் பேசப்பட்டு வருகிற சொல் நறுக்கு. நறுக்கு என்பதன் மூலம் பலவித அர்த்தங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன. வெட்டு தல், துண்டாக்குதல் ஆகிய நேரடி அர்த்தங்கள் இந்தச் சொல்லில் காணப்பட்டாலும் தண்டித்தல், அடி போடுதல், கொட்டத்தை அடக்குதல், சுருக்கமாகப் பேசி வெற்றியீட்டுதல் (வெட்டொன்று துண்டு ரெண்டு என்று இதைப் பெருமிதமாகச் சொல்லும் பழக்கமும் உண்டு) எனப் பல உட்பொருள்கள் பொதிந்திருக்கும் பேச்சு மொழிதான் இந்த நறுக்கு.

"அவன்ர வாலை ஒட்ட நறுக்க வேணும்" இதில் வரும் நறுக்கு என்பதில் நபருக்குள்ள வால் என்பது அவரது கொட்டத்தையும் அதை நறுக்குதல் என்பது கொட்டத்தை அடக் குதல் என்பதாகவும் அர்த்தம் பெறும். வாலை நறுக்குதல் என்பதை அவரது அட்டகா சத்தை அடக்குதல் என்பதாகவும் பொருள் கொள்ளலாம்.

"அந்த வெங்காயத்தைக் கெதியா நறுக்கித் தா"

"பாக்கைக் கத்தியால வெட்ட முடியாது பாக்கு வெட்டியாலதான் நறுக்க வேணும்"

"பூச்சி பயிரை அப்பிடியே நறுக்கித் திண்டு போட்டுது"

"எலி சாக்கு முழுவதையும் நறுக்கிப் பேட்டுது"

"நூலைப் பல்லால நறுக்கு"

என்பவற்றில் வரும் நறுக்கு என்பது வெட்டுதல், துண்டுகளாக்குதல், துவாரமிடுதல், துளையிடுதல் ஆகிய அர்த்தங்கள் பிறக்குமாறு பயன்படுத்தப்பட்டுள்ளது.

"எந்த விசமயமானாலும் நறுக்காய்ப் பேசி முடிக்க வேணும்"


"அவன் எல்லா விடயங்களிலும் நறுக்கான ஆள்" இவற்றில் வரும் நறுக்கு என்பது விடயப்பொருளைச் சுருக்கமாகக் கதைத்து முடிப்பதுடன் அதில் வெற்றியீட்டுவதையும், இறுக்கமான செயற்பாடுகளுடன் விடயத்தைக் கச்சிதமாகக் கையாளும் நபரின் குணப்பண்பையும் குறிக்கிறது.

# நீலப்பெருமாள் பரம்பரையும் தம்பி முதலியின் உரிமையும்

ஜேம்ஸ் ரி.இரத்தினம்

(எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா மற்றும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆகியோரின் தமிழ் மூலத்தைக் குறிப்பிடும் கட்டுரைகளின் தொகுப்பு)

07




மூத்தோரின் குறைபாடுகள் மற்றும் நேர்மையின்மை பற்றிப் பொறுப்புக்கூற நம்மால் முடியாது. அவ்வாறே கடந்த காலத் தவறுகளை பிள்ளைகள் மற்றும் பேரப் பிள்ளைகள் மேல் சுமத்துவதும் சரியாகாது. அதனால் ஜெயவர்த்தனவோ வேறு எவருமோ இன்னொருவரின் தமிழ்ப் பிறப்பை நினைவுபடுத்தித் தாக்குதல் தொடுப்பது வருந்தத்தக்கது. அதையும் விட ஈவிரக்கமற்ற செயலுமாகும். பிரதமர் தமிழ்ப் பரம்பரையில் தோன்றி வளர்ந்தவர் என்பதற்காக அவரைத் தாக்குவது அழகற்ற செயலாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தியோகபூர்வ பத்திரிகையை நடத்தி வருபவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவே. அப்பத்திரிகை பிரதமர் தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்த நீலப்பெருமாள் பரம்பரையைச் சேர்ந்தவர் எனத் தாக்குதல் தொடுக்க முயற்சிக்கிறது. என்னால் எழுதப்பட்டு 1957 ஜூலை 19ஆம் திகதி டிரிபியூன் பத்திரிகைளில் வெளிவந்த கட்டுரையின் உள்ளடக்கத்தையே அதற்கு ஆயுதமாக அந்தப் பத்திரிகை எடுத்துக்கொண்டுள்ளது. பிரதமரின் ஆதி வம்சம் தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த நீலப் பெருமாள் எனும் தமிழ்ப் பூசாரியின் பரம்பரையுடன் தொடர்புடையது என நான் விளக்கியிருந்தேன். பிரதமரை அவமானப்படுத்துவதற்காக நீலப்பெருமாள் அவதாரத்தை அழைப்பதற்கு ஜெயவர்த்தன முறை தவறிப் பிரயோகிப்பது அக்கட்டுரையினையே. அக் கட்டுரையினை வாசித்த பெரிய மனிPதர்களின் இதழ்களிலே ஏளனச் சிரிப்பொன்று உதித்திருக்கும் என்பதும் உறுதியே.

ஆனால் சற்றுப் பொறுங்கள் ஹாஸ்யமும் இன்னும் முழுமை பெறவில்லை. தம்பி முதலியின் அகௌரவமான கண்ணாடி மாளிகையில் இருக்கும் ஜெயவர்த்தன நீலப்பெருமாளுக்குக் கல் எறிவது எவ்வாறு? ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து கிறுக்கிக் கொண்டிருக்கும் போலித் தபசிகளுக்குச் சந்தேகமில்லாமல் இவ்விடயம் மனவருத்தத்தைத் தந்திருக்கும்.

நீலப்பெருமாள் இலங்கையை வந்தடைந்தது


பதினாறாம் நூற்றாண்டிலேயே ஆகும். தம்பி முதலி வந்ததோ பிரித்தானியர்கள் இலங்கையின் கடற்கரைப் பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டதற்குக் கிட்டிய காலத்திலேயே. ஐக்கிய தேசியக் கட்சியிலிருக்கும் வீணாய்ப் போனவர்களுக்கு சிலவேளை இது தெரியாதிருக் கலாம். தமது எதிர்பார்ப்புகள் கைகூடாததால் ஏற்பட்ட விரக்தி யின் காரணமாக இலங்கையி லிருந்து நிரந்தரப் பிரியாவிடை பெற்று வேறு நாடுகளில் வாழ் வதற்காகச் சென்ற வென்கெய் சல்ஸ் மற்றும் ஏனைய பறங்கியர் கள் ஜெயவர்த்தனவை விட நீண்ட நாள் இலங்கைவாசிகள் என்பதும் அவர்களுக்குத் தெரி யாதிருக்கலாம். அய்யகோ! ஜெயவர்தன குடும்பத்தினர் கடந்த காலத்தைப் பழிக்கும் பாங்கு.

தமக்கு ஒருபோதும் அப்படி யான பரம்பரையோடு தொடர் பில்லையென்று இப்போது துணிச்சலாக நிராகரிக்கும், பரிசுத்தமான தமிழ் இரத்தத்தில் உதித்த ஜெயவர்த்தனவின் மூதாதையர்கள். அநுராதபுரத் தில் வீர துட்டகைமுனுவின் சைனியத்திற்கு எதிராக எல்லா ளனின் குழுவினர் போரிட்ட காலத்தில், எல்லாளனுக்கு வெற்றி வேண்டி எழுப்பிய கோஷத்தின் எதிரொலியால் கோரமண்டல கடற் கரை அதிர்ந்ததையும் (அவர்கள்) அறியாதிருக்கலாம்.

தம்பி முதலியின் அவதாரம் இடு காட்டிலிருந்து எழுந்து வந்து, தனது பரம்பரையைச் சேர்ந்த நன்றிகெட்ட ஒரு மனிதன் தனது பரம்பரையையே எட்டி உதைக்கிறார் என்று குற்றஞ் சாட்டவும் கூடும். அலுமாரியின் உள் ளேயுள்ள எலும்புக் கூட்டினை மறைத்துக்கொள்ள வேண்டுமானால் நீலப்பெருமாளை இதற்குள் இழுக்க வேண்டாமென அறிவுரை கூற விரும்புகிறேன்.

தமது பிதாமகன் இற்றைக்குச் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கும் குறைவான காலத்தில் இலங்கைக்கு வந்த வரலாற்றைக்கொண்ட ஜெய வர்த்தன குடும்பத்தினருக்கு இரண்டு குடும்பப் பெயர்கள் உண்டு. ஒன்று ஜெயவர்தன என்பது. இன்னொன்று இதுவரை வெளியிடப்படாத பரம இரகசியம். 1830 மே மாதம் 15ஆம் திகதி வெளியிடப்பட்ட "சிலோன் கெஸட்" பத்திரிகையும் அதுபற்றி மௌனம் சாதிக்கின்றது. அச்சரிதை யில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள் ளது.

"சிங்கள மாதிரியிலான உடை




ஜே.ஆர். ஜெயவர்தன (வலது) அவர்களின் தந்தையார் இயுஜீன் வில்ஃவிரட் ஜெயவர்த்தன KC. தாயார் அக்னஸ் ஹெலன் டொன் பிலிப்ஸ் விஜயவர்தன மற்றும் அவரின் சகோதரர்கள்.

**அலுமாரியின் உள்ளேயுள்ள எலும்புக் கூட்டினை மறைத்துக் கொள்ள வேண்டுமானால் நீலப்பெருமாளை இதற்குள் இழுக்க வேண்டாமென அறிவுரை கூற விரும்புகிறேன்**

யணிதல் போன்ற பழக்கவழக்கங் களை ஏற்படுத்திக் கொண்ட முதலி அவர்களின் தந்தையார் தாம் அதுவரை பயன்படுத்திய குடும்பப் பெயரைக் கைவிட்டு அதற்குப் பதி லாக ஜெயவர்தன எனும் பெயரைப் பயன்படுத்த ஆரம்பித்தார்"

அவ்வாறு கைவிட்ட குடும்பப் பெயர் என்ன? நிச்சயமாக அது ஒரு தமிழ்ப் பெயராகத்தான் இருக்க முடி யும். ஒருவேளை அது சின்னத்தம்பி அல்லது பெரியதம்பி ஆக இருக்க லாம். அவ்வாறு இல்லாவிட்டால் சைமன் புள்ளே, சாமிக்கண்ணு ஆச்சாரி அல்லது புதிதாக ஆரிய சிங்களத் தனத்தை ஆரூடம் செய்து கொண்டுள்ள அதிகமானோர் விரும் பாத தொண்டமான் ஆகவும் கூட இருக்கலாம்.

(மிகுதி அடுத்த வாரம்)



# தலைநிமிந்து நிக்கிறமாதிரியோ நிலைமையள் இருக்கு?

கதிரேசன் காத்தவராயன்

அண்டைக்கதிலை சுப்பிரமணியம் மாஸ்ரர் வீட்டடிக்குப் போனன். அங்கை முருகேசர், சம்பர், கனகர் ஆக்கள் மாஸ்ரரோடை கதைச்சுக்கொண்டிருந்தினம். என்னைக் கண்ட மாஸ்ரர் உற்சாகமாய் 'கதிரேசு...வாரும் ஒராள் குறையுதெண்டல்லே கவலைப்பட்டனாங்கள்....இரும்' எண்டார். முருகேசர் கொஞ்சம் கடுகடுப்பாய் இருக்கிற மாதிரிக் கிடந்துது.

'என்னப்பா முருகேசு... புதினங்கள் என்னமாதிரி?' எண்டு கொண்டு இருந்தன். 'என்ன?... புதினமோ? எல்லாப் பக்கமும் புதினங்கள்தான்...மண்டைதான் விறைச்சு விசர் பிடிக்கிற மாதிரிக் கிடக்கு' எண்டு எரிச்சலோடை முருகேசர் சொன்னார். 'என்னப்பா முருகேசண்ணை கொதிப்பாயிருக்கிறமாதிரிக் கிடக்கு?' எண்டு சம்பர் கதையைஅறிய ஆவலானார்.

'எல்லாம் வாய்ச் சவடாலிலைதான் காலம்போகுது... அரசியலும் போகுது...சனத்தை நல்லாத்தான் ஏமாத்துறாங்கள்...' எண்டார் முருகேசர். 'அது என்ன இப்பவே புதிசாயே எதெண்டாலும் நடக்குது' எண்டு முருகேசரைத் தூண்டுறமாதிரி கனகர் சொன்னார். 'உண்மைதான்... காலங்காலமாய் நடக்கிறதுதானே... எண்டாலும் இப்ப வலு மோசமாயல்லே நடக்குது?' எண்டார் மாஸ்ரர்.

'குறிகட்டுவானிலை அரசமரம்... பண்ணையிலை நாக பூசணியம்மன் எண்டு வாயைப் பாத்துக் கொண்டிருக்க மயிலிட்டியிலை கும்பாபிசேகம் முடிஞ்சுது....' எண்டார் முருகேசர். 'அதுக்கல்லே அண்டைக்குப் பெரியபோராட்டம் நடந்திருக்கு...கச்சேரிக் கூட்டத்தைவிட்டு எம்பிமார்வெளிநடப்புச் செய்திருக்கினம்..' எண்டு சம் பர் சொல்லிக்கொண்டிருக்க இடைமறிச்ச முருகேசர் 'இஞ்சார் சம்பு...மயிலிட்டியிலை கட்டினது யாப்பாணத்திலையே உயரமானதுஎண்டிறாங்கள்...அப்ப அதை ஒரு நாளிலை செய்யயில்லை...' எண்டு முருகேசர் சொல்லி எல்லாரையும் ஒரு பார்வை பாத்தார்.

'முருகேசர் சொல்லுறதுக்கை இன்னொண்டு மிருக்குது... நாங்கள் முடிஞ்சுபோன விச யங்களுக்குத் தான் கனாக் கண்டெழும்பின மாதிரி கத் திக் கூப்பாடு போடுறது வழமையாகிப் போச்சுது... கந்த ரோடையிலை காணி விலைப்பட்ட விசயம் விகாரை கட்டவெண்டு பிக்கு கடிதமெழுதும் வரைக்கும் ஒருத்தருக்கும் தெரியாது... போகிறபோக்கிலை... சீய்க்...வலு மோசமாயல்லே போகுது?' எண்டு பெருமூச் சொண்டை மாஸ்ரர் விட்டார்.

'எங்கடையாக்கள் எப்பவும் மற்றவையை நம்பி அவை பாப்பினம் இவை பாப்பின மெண்டு இருந்து பழகிவிட்டம்...முந்தி அவர் பாப்பார் எண்டு தங்கடை வேலையிலை மட்டும் கவனமாயிருந்ததின்ரை விளைவுளிலை தான் இதுவும் ஒண்டு..' எண்டு நான் சொல்ல 'இப்பவும் அப்பிடித்தானே இருக்கிறம்...மயிலிட்டியிலை அந்தப் பெரிய விகாரையைக் கட்டினதை ஒருதருமே கண்டு கொள்ளயில்லை... இப்ப குத்திமுறிஞ்சு என்னவாகப் போகுது?' எண்டார் கனகர்.

'இப்ப பாருங்கோவன்... கந்தரோடையின்ரை நிலையை... அந்தப் பிக்கு சொந்தக் காணியிலை எதையும் செய்ய சட்டம் இடங்குடுக்குமில்லே?' எண்டார் மாஸ்ரர். 'உந்தத் தேசியம்பேசுகிற அரசியல்க்காறர் சனத்தோடை உறவில்லாமலிருக்கினம் எண்டதல்லே வெளிப்படுகுது? எனி சனத்துக்கு இப்பிடியான விசயங்களைச் சொல்லிக் குடுக்கிறதுக்குப் பதிலாய் ஆளையாள் பிடிச்சுத் தின்னுறதும்... தங்கடை பாடுகளை பண்ணுறதுமாயல்லே காலத்தைக் கடத்துறாங்கள்?' எண்டார் கொதிப்போடை முருகேசர்.

'போனகிழமை செய்த கதவடைப்புக்கு காரணம் சரியாச் சொல்லி வழிகாட்டத் தெரியாதவை சனத்தை சரியாய் விழிப்பூட்டப்போகிறாங்களே?' எண்டு நான் சொல்ல 'சரியாச் சொன்னீர் கதிரேசன்' எண்டு உற்சாகமானார் மாஸ்ரர். 'இதுகளுக்கை மயிலிட்டியைக் கையாள வேண்டின செல்லஎடுபிடிக்குச் சிக்கல்...சரி பிழையை நீதிமன்றம் திர்மானிக்கலாம்...அதுதான் சொல்லவேணும்...ஆனால் அந்தத் தீர்ப்பு வரும் வரைக்குமாவது இடைநிறுத்துறம் விலக்கி வைக்கிறம் எண்டேதும் கதை வருகுதோ எண்டு பாத்தால்.. சத்தமேயில்லை...' எண்டார் முருகேசர் எரிச்சலாய்.

'இப்பிடியான ஆக்களை வைச்சு சனத்தோடை உறவு வைக்க முடியுமே? சனம் நம்பித்தான் சொல்லுமோ? காங்கேசந்துறை மகிந்த மாளிகையையே புதினமாப் பாத்து ஆற்றை வீடுது எண்டு கேட்ட தலைவரைத்தான் நம்புறதோ?...' எண்டு கனகர் சொல்லிக்கொண்டிருக்க 'என்னவெண்டாலும் நடக்கட்டும்... தலையை நிமித்தி ஒருசொல்லுச் சொல்லமுடியுதோ? கண்டறியாத அரசியல்..' எண்டுகொண்டு எழும்பி வந்திட்டன்.

# 09 மீட்டல்...

துன்பானந்த சுவாமி



அவசரமான உலகம் என்பதற்கூடாக நாம் நிறையவே விபரீதங்களுக்குள் சென்றுகொண்டிருக்கிறோம். விபரீதம் என்பதை அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலுமாக பின்தொடரிகளாக மட்டுமே நாம் இருக்கப் பழகியிருக்கிறோம். உணவு மற்றும் குடிபானம் என்று வருகிறபோது குடிநீருக்காகப் படுகிறபாடு இப்படி இருக்க நிறம் சுவை மணம் என அனைத்தும் செயற்கையான முறையில் உருவாக்கப்பட்ட பானங்களது நிலையைப்பற்றிப் பேச ஏராளமுண்டு.

இன்று குடிநீர்ப் போத்தல் இல்லாத கொண்டாட்டங்கள் போலவே குடிபானங்கள் இல்லாத கொண்டாட்டங்களும் இல்லை என்கிற நிலையில் வந்துநிற்கிறோம். அன்றைய காலத்தில் மோர் பதநீர் சோறுவடித்த கஞ்சி இளநீர் எனத் தாகம் தணிக்கவும் இரசம் மூலிகைக்குடிநீர் என பிணிதவிரக்கும் பானங்களும் எம் முன்னோர்களின் பயன்பாட்டிலிருந்து அவர்களை உற்சாகமாவும் ஆரோக்கியமாகவும் பேண உதவின என்பதை நம்பமுடியாத ஒரு தலைமுறையினராக நாங்கள் இருக்கிறோம்.

தாகம் தணிப்பதற்காகவும் உற்சாகத்துக்காகவும் என நாம் இன்று பருகுகின்ற அதிமுக்கியமானது தேனீர். இது எமதானதல்ல. தெருத்தெருவாக தள்ளு வண்டிமூலமாக மணியொலியுடன் இலவசமாக விநியோகிக்கப்பட்டு பழக்கப்படுத்தப்பட்ட ஒன்றே இது. ஆரம்பத்தில் வெறும் சாயமே வழங்கப்பட்டதாகவும் அதனை வீட்டி லிருக்கும் பாத்திரங்களில் பெற்றுவந்து சர்க்கரை அல் லதுபனங்கட்டியைக் கடித்தபடி குடித்ததாக மூத்தவர்கள் நினைவுகூருகின்றனர். முக்கியமாக நோய் நிலைகளில் இது அதிகம் பருகப்பட்டிருக்கிறது. நோய் இதனால் தீர்ந்ததோ இல்லையோ தேனீர் இல்லையெனில் இயங்க முடியாதென்கிற மனநோய்க்கு ஆளாகிவிட்டோம் என்பதே உண்மை.

இப்போது விதம் விதமான தேனீரைப் பார்க்கவும் நுகரவும் குடிக்கவும் பழகி அல்ல பழக்கப்படுத்தப்பட்டு விட்டோம். இது எமது பால், இளநீர். நன்னாரிபானம், மோர், பதநீர், நெற்பொரிநீர், மல்லிநீர் என்பனபோன்ற ஆரோக்கிய பானங்களை இல்லாதொழித்து விட்டது. அவற்றால் தீர்க்கப்பட்ட உடற்சூடு, பித்தம், குடற்சுத்தம், சுறுசுறுப்பு என்பனபோன்ற ஆரோக்கிய விளைவுகளை இல்லாதொழித்துவிட்டது. இன்று விருந்தாளிகளை அழைத்து உபசரிக்கின்ற நிகழ்வு தேனீர்விருந்துபசாரமென ஆகிவிட்டது. இதை ஒரு வகையில் நாகரீகமோகமெனஅழைப்பதிலும் தவறில்லை.


தேனீர் என்பது பழக்கப்படுத்தப்பட்ட ஒன்று என்பதற்கப்பால் விளம்பரக் கவர்ச்சியும் தேனீரின் பயன்பாட்டை அதிகமாக்கியுள்ளது. இன்று உடல்மெலிவதற்கு, உடல் கட்டமைவுபெற. நீரிழிவுக்கு. முகம்பிரகாசிக்க என்று விதவிதமான பெயர்ச்சுட்டி விளம்பரங்களுடன் தாராளமா பெட்டிக்கடைகளிலும் வாங்கக்கூடிய பண்டமாகி விட்டிருக்கிறது. அத்துடன் தேனீருடன் வாசனைக்காக பல்வேறுவிதமான சேர்க்கைகளும் தாராளமாகவே உண்டு. இவை நிறம், சுவை, மணம் ஏராளமான கவர்ச்சிகளை வழங்கி அதனை ஆடம்பர பானமாக மாற்றியுள்ளன. இவற்றால் நன்மைகள் என்ன? தெரியாது. செயற்கை இரசாயனங்களது விளைவுகள் தெரியும்.

தேனீர் ஒருபுறமிருக்க பிற பானங்களைப்பற்றி பேசவே தேவையில்லையென நினைக்கிறேன். அத்தனையும் கலப்பற்ற செயற்கை இரசாயனங்கள்தான். பழங்களது சுவையுடனும் வாசனையுடனும் காணப்படபவை அத்தனையுமே இரசாயனங்களது கலவையால் கிடைக்கிற பெறுதிகளே. உண்மையான பழங்களது சாறுதான் என்று எடுத்துக்கொண்டாலும் அவைஎப்படி மாதக்கணக்கில் பழுதடையாது இருக்கின்றன என்பதையாவது எண்ணியிருக்கிறோமா என்றால் நிச்சயமாக இல்லை என்பதே பதிலாக இருக்கும்.

இவ்வாறான நிலையிலேயே கோப்பியும் இருக்கிறது. விதவிதமாகக் கிடைக்கிறது. தாராளமாகக் கிடைக்கிறது. தேனீரை விடக் கோப்பியினது நாகரீகப் பெறுமானம் மிக அதிகமானது. இவ்விடத்தில் குறிப்பிடவேண்டிய வேதனையும் நகைப்புக்கிடமானதுமான விடயம் நோய்களுக்கான காரணிகளே இவ்வாறான பானங்களும்தான் என்பதை உணராது நோய்நிலையைத் தணிக்க அல்லது ஒரு ஆறுதலுக்காக என இவற்றையே பருகுகின்ற நிலையில்தான் நாம் இன்று இருக்கிறோம். அறிவியலில் உயர்ந்த இடத்திலிருக்கிறோம் என்று பெருமை பேசத் தயங்காத நாம்தான் இவற்றைத் தேடித்தேடி பருகுகிறோம். நாம் பருகும் நீரிலிருந்து தேனீர் கோப்பி பிற பானங்கள் எல்லாமே தேவை என்பதற்கப்பால் நாரீகம் என்கிற பெறுதியையே அதிகமதிகமாகக் கொண்டிருக்கின்றன என்பதை மறுக்கமுடியுமா? பிற பானங்கள் என்று வருகிறபோது பேசுவதற்கு ஏராளம் உண்டு. பேசுவோம்.

# சலாகம என்கிற தொழிலாளர் வர்க்கம்

சார்ள்ஸ் எட்



தமிழர்கள் மத்தியில் நிலவுவதைப்போலவே சிங்களவர்கள் மத்தியிலும் பல்வேறு சாதிப் பிரிவுகள் இருக்கின்றன. தமிழர்களைப் போல கொஞ்ச நெஞ்சமல்ல...! **32**க்கு மேற்பட்ட சாதிப் பிரிவுகள் சிங்களவர் மத்தியில் இருக்கின்றன என்கிறார்கள் இதுபற்றித் தேடியறிந்த கட்டுரையாளர்கள். இதைவிடக் கண்டிச் சிங்களவர், கரையோரச் சிங்களவர் என்று இரு பெரும் பிரிவுகள் வேறு இருக்கின்றன. ஆனால், தமிழர்களைப்போல சாதி பற்றிய ஏற்றத்தாழ்வுகளோ, தீண்டாமை தீயோ சிங்களவர்களுக்கிடையில் பற்றி எரிவதில்லை என்கிறார்கள் அவதானிகள்.

**இலங்கையில் சிங்கள மத்தியில் காணப்படுகின்ற தொழிலாளர் வர்க்கங்களில் ஒன்றே சலாகம என்கிற சாதிப்பிரிவினர்**



இலங்கையில் சிங்கள மத்தியில் காணப்படுகின்ற தொழிலாளர் வர்க்கங்களில் ஒன்றே சலாகம என்கிற சாதிப்பிரிவினர். சாலிய, தெவங்க, பத்மசாலி, பத்தறியார், தொகத்த வீர, கைக்கோழர் என்றும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் கறுவா உற்பத்தியில் ஈடுபடுகின்ற ஒரு சாதியாகவே இவர்கள் அடையாளம் காணப்பட்டனர். இத்தொழிலாளர்கள் இலங்கையின் தென்பகுதியான பலப்பிட்டிய, கொஸ்கொட, ரத்கம, ஹிக்கடுவ, பூசா பகுதிகளில் செறிந்து வாழ்கின்றனர். இந்தப் பகுதிகளிலேயே இலங்கையின் கறுவாச் செய்கை அதிகம் மேற்

கொள்ளப்படுகிறது.


கறுவா இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு தாவரமாகும். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்திலிருந்து இன்று வரை இலங்கையின் கறுவாவுக்கு அதிக மவுசு இருந்து வருகிறது. போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னர் கறுவா ஒரு காட்டு மரமாகவே வளர்ந்திருக்கிறது. கொழும்பில் சினமன் கார்டன் என்று தற்போதும் அழைக்கப்படுகின்ற கறுவாத்தோட்டம் பகுதியிலும் கறுவா உற்பத்தி செய்யப்பட்டது. பின்னர் இந்தப் பகுதியில் கறுவா உற்பத்தி கைவிடப்பட்டு இன்று பெருநகரமாக விளங்குகிறது.

தற்போது இலங்கை முழுதும் கறுவா உற்பத்தி செய்யப்படுகிறது. யாழ்ப்பாணத்திலும் கறுவா உற்பத்தி செய்யப்படுகிறது. அதைத் தற்போது சலாகம என்ற தொழிலாளர் வர்க்கத்தினர் மாத்திரம் மேற்கொள்கொள்வதில்லை. எனினும் கறுவா உற்பத்திக்கான பிதாமகர்கள் சலாகம தொழிலாளர்களே...!

# “வீட்டுக்கு வீட்டுக்கு வாசல் படி வேணும்....?”

**மேனகா**

இந்துக்கள் மத்தியில் காணப்படுகின்ற மிகப் பெரிய பிரச்சினையாக உருவெடுத்திருக்கிற வாஸ்து பார்க்கும் விடயம். வாஸ்து பார்த்து வீடு, கிணறு, மலசலகூடம், நுழைவாயில் கதவு எனத் தமது பெரிய காணிக்குள் அமைப்பவர்கள், சில வருடங்களின் பின் தமது பிள்ளைகள் வளர்ந்து தனிக் குடும்பங்கள் அமைத்ததும் அவர்களுக்கு அந்தக் காணியைப் பகிர்ந்து கொடுப்பார்கள். அந்தப் பிள்ளைகள் வீடு கட்ட முயற்சிக்கும் போது புதிய வீட்டுக்கு வாஸ்து பார்ப்பார்கள். இப்போது ஏற்கனவே வாஸ்து பார்த்து வெட்டப்பட்ட கிணறு,அமைக்கப்பட்ட நுழைவாயில் என எல்லாமும் அமைக்கப்போகும் புதிய வீட்டுக்குப் பொருத்தமில்லாமல் இருக்கிறது என்று வாஸ்து பார்ப்பவர் குடும்பங்களின் தலையில் இடியை இறக்குவார். இதனால் மனதளவிலும் செலவு விடயத்திலும் பாதிப்புகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.




**வாஸ்து பார்ப்போரின் அணுகுமுறை**

வாஸ்து பார்க்கும் பெரும்பாலானோர் சிறந்த கல்வி அறிவுடையோரல்ல. வாஸ்து பற்றிய அறிவும் அரிதாகவே காணப்படுகிறது. அவர்கள் கூறும் விடயங்களை ஏன்? எதற்கு? அப்படி? என்று அவர்களிடமே கேட்டால், அதற்கு அவர்களிடம் பதில் இருக்காது. பதில் தெரியாத கட்டத்தில் அது அப்படித்தான் என்று தெய்வ வாக்குப்போல கூறி முடிப்பர். வாஸ்து என்ற விடயம் மிகவும் பழமையானது. அது தற்போதுள்ள நவீன காலச் சூழலுக்குப் பொருந்தாது. மனிதர்கள் காட்டில் மலம் கழித்த காலத்தில் வாஸ்து தோன்றியது. வீடுகளுடன் ஒட்டிய நவீன கழிப்பறைகள் வந்துவிட்ட காலத்தில் அதைக் கடைப்பிடிக்க முடியாது. பல மாடிக் கட்டடங்களில் ஒவ்வொரு மாடிகளிலும் ஒருவரின் தலைக்கு மேலுள்ள மாடியில் இன்னொருவர் மலம் கழிக்கும் சூழல் இருக்கிறது. மலம் கழிக்கும் விடயம் மாத்திரம் தற்போது வாஸ்துவுக்கு முரணாக இல்லை. வாழ்க்கையும், வாழ்க்கைச் சூழலும் முற்றிலும் நவீன மயப்பட்டு விட்ட காலத்தில் வாஸ்து என்கிற பழமை திண்டாடிக் கொண்டிருக்கிறது என்பதே உண்மை.

**வடக்கு வாசல் வீடுகள்**

பழந் தமிழர்கள்

ஓலை வீடுகளிலேயே வாழ்ந்தார்கள். அதில் சுவாமி அறை என்ற ஒன்று இருக்கவில்லை. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் சிங்கப்பூர், மலேசியா நாடுகளில் தொழில் புரிந்தோர் சுண்ணாம்பு வீடுகளைக் கட்டினர். அவை பெரும்பாலும் ஒரு கூரையின் கீழ் அமைக்கப்பட்ட இரண்டு அறைகள், விறாந்தை, குசினி ஆகியவற்றைக் கொண்டிருந்தன. வசதி படைத்தவர்கள் நாற்சார வீடுகளை அமைத்தார்கள். வடக்கு வாசல் வீடுதான் நல்லது என்ற கருத்து மக்கள் மத்தியில் இருந்தது. பெரிய அறை சுவாமி அறை என்றும் அது வடக்குப் பக்கமாக வாசலைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுமே வாஸ்துக்காரரின் அறிவிப்பாக இருந்தது. இதனால் சூரிய ஒளி நன்கு படக்கூடிய, காற்றோட்டமுள்ள வாய்ப்பைப் பல வீடுகள் இழந்தன. வடக்கு வாசல் வைத்துக் கட்டப்பட்ட வீடுகள், சுபநேரம் பார்த்து அடிக்கல் நாட்டப்பட்ட வீடுகள், சுப முகூர்த்தம் பார்த்துக் குடிபுகுந்த வீடுகள் எனப் பல வீடுகள் இப்போது சிதைந்து அழிந்து கிடக்கின்றன. வாஸ்துவும் காப்பாற்றவில்லை, சுப நேரமும் கைகொடுக்கவில்லை. தற்போது மிக அதிக விற்பனை நிலையங்களாக மாறியுள்ள பெரும்பாலான மதுபானநிலையங்கள் வாஸ்து பார்த்துக் கட்டப்பட்டவை அல்ல. ஆனால் அவற்றின் வளர்ச்சி கொடி கட்டிப் பறக்கிறது.

### பெரிய அறை

வீடுகளில் பெரிய அறை ஒன்று கட்டப்பட்டு அதற்கு மிகச் சிறிய யன்னல் ஒன்றும் வடக்கு வாசல் பக்கமாகப் பெரிய பூட்டுப்போட்ட பலமான கதவுகளும் அமைக்கப்பட்டன. தானியங்கள், பெறுமதி மிக்க பொருள்கள் ஆகியவற்றை உள்ளே மறைத்து வைப்பதற்கே அந்த அறை கட்டப்பட்டது. அந்த அறை எப்போதும் இருட்டாகவே இருக்கும். அதற்குள் பெட்டகத்தில் பணம், தங்கம் ஆகியன பூட்டி வைக்கப்பட்டிருக்கும். அதற்குள்ளுள்ள பொருள்களைக் கைமாற்றாகக் கேட்டு வருபவர்கள் முன்னிலையில் அந்த அறையைத் திறக்காதிருப்பார்கள். இப்ப இருட்டிப் போச்சுது நாளைக்கு வா, இன்றைக்கு வெள்ளிக்கிழமை நாளைக்கு வா என்று ஏதாவதொரு சாட்டுச் சொல்லித் தவிர்ப்பார்கள்.

இந்தப் பெரிய அறைக்குள் சுவாமிப் படத்தை வைத்து அதைச் சாமி அறை ஆக்கிய பின் கண்டபடி யாரும் செல்வதில்லை. ஏற்கனவே இருந்த படி தமது சொத்துக்களைப் பாதுகாப்பதே அதன் நோக்கமாக இருந்தது.

### சாமி அறைக்குப் பின்னால் எதுவும் கட்டக்கூடாது

சாமி அறைக்குப் பின்னால் எதுவும் கட்டக்கூடாது என்பதும் வாஸ்துதான். அங்கிருந்து சாமி அறைக்குள் புகுந்து அங்குள்ள பொருள்களைத் திருடி விடுவதைத் தவிர்ப்பதே அதற்குக் காரணம். இது ஒரு முக்கிய வாஸ்தாக மக்கள் மத்தியில் தொடர்கிறது. வீட்டில் மலக்குழி என்பது இத்தத் திசையில்தான் இருக்கவேண்டும் என்பது வாஸ்து சாஸ்திரத்தில் இல்லாத ஒன்று. ஆனால் வாஸ்து பார்ப்போர் மலக்குழி இந்த இடத்தில் இருப்பது கூடாது என்று கூறி அதை இடிக்கவும் மாற்றவும் செய்கிறார்கள். முன்னைய காலங்களில் வீட்டை விட்டுத் தூரத்தில் மலசல கூடங்களை அமைத்தார்கள். தற்போது வீட்டுக்குள்ளேயே மலசல கூடத்தை அமைத்திருப்பது எந்த வாஸ்துவிலும் சொல்லப்படாத ஒன்று.

### கிணற்றடிப் பாதை

முனக்னைய காலத்தில் சிமெந்துக் கட்டுகளால் கட்டப்படாத நிலையில் கிணறுகள் காணப்பட்டன. நில மட்டக் கிணறுகளே அதிகம் இருந்தன. அந்தக் காலத்தில் மின் விளக்குகளும் இல்லை. அந்தச் சூழலில் கிணற்றடிக்கு அருகில் நடைபாதை வைத்தால் இரவு நேரங்களில் தடுமாறிக் கிணற்றுக்குள் விழ வாய்ப்பிருக்கும் என்பதால் கிணற்றடியால் வீட்டுக்குப் பாதை வைக்கக் கூடாது என்பதைக் கடைப்பிடித்தனர். இதைவிட அந்தக் காலத்தில் பாதுகாப்பான குளியல் அறைகள் இருக்கவில்லை. கிடுகு, பனை ஓலையால் அடைத்த வேலிகளே இருந்தன. பெண்கள் குளிக்கும் போது கிணற்றடிப் பாதையால் திடீரென யாரும் வந்துவிட்டால் சங்கடமாகிவிடும் என்பதாலும் கிணற்றுக்கு அருகில் பாதை இருக்ககூடாது என்று கூறப்பட்டது. இது இன்று வாஸ்துவாக மாறி விட்டது. இதனால் பாதுகாப்பான கிணற்றடியால்கூட பாதை வைப்பதில்லை. பலர் ஆள் துளைக் கிணறு பாவிக்கின்ற நிலையிலும் இந்த வாஸ்துவைக் கடைப்பிடிப்பது தான் நகைப்பிற்கிடமானது.

### பணக்காரரின் பயம்

பணக்காரரே இந்த வாஸ்து பார்ப்பவர்களிடம் அதிகம் ஏமாறுகின்றனர். சதுரங்க வேட்டை என்ற திரைப்படத்தில் இந்த விடயம் மிகத் தெளிவாகக் காட்டப்படுகிறது. சாதாரண வாழ்க்கை வாழ்பவனுக்கு அன்றைக்கு உழைத்தால் தான் உணவு என்றிருக்கும்போது அவன் வாஸ்து பார்த்து எதையும் செய்ய வாய்ப்பில்லை. அதிக பணமுள்ளவர்களே பயத்தை




வயிற்றில் கட்டிக்கொண்டு வாஸ்து போன்ற விடயங்களையும் தாங்கிப் பிடித்து வாழ்ந்து வருகிறார்கள். இதனால் அதிகம் செலவழிக்கவும் செய்கிறார்கள். எது வாஸ்து எது வாஸ்துவுக்குள் அடங்காதது என்றுகூட இவர்கள் சிந்திப்பதில்லை. இடி சாஸ்திரிகளும் (கதவு யன்னல்களை இடித்து வேறு இடங்களில் வைத்தால் நல்லது என்று கூறுவோரை இவ்வாறு அழைக்கின்றனர்.) வாஸ்து பார்ப்போரும் பணம் உழைக்க அதிக வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது இந்தப் பணக்கார வர்க்கமே. விஞ்ஞான பூர்வமாக அறிய வேண்டிய பலவற்றை அறியாது வாஸ்து என்ற பெயரில் மூட நட்பிக்கைளில் மூழ்கிப் போய் அதிக பணத்தை இழக்கவும் செய்கிறார்கள். ஆரம்ப காலத்தில் ஏதாவது ஒருவிதத்தில் இந்த வாஸ்து பார்க்கும் விடயம் உதவியிருந்தால்கூட, நன்மையளித்தால்கூட இன்றைய காலத்தில் இதனால் பலர் அவஸ்தைப்படவும் செலவு செய்யவுமே அதிகம் நேரிடுகிறது.

---

# வாசுதேவனின் கவிதைகள்

பூவொன்று
வாடியது என்று நான்
சொல்ல எடுத்ததை
வாசனையில்
முகமொன்று மலர்ந்தது
என்று சொல்லி முடித்தது
என் கவிதை





உனக்குச் சொந்தமான
நிலத்தின்
உனக்குச் சொந்தமான
மரத்தின்
உனக்குச் சொந்தமான
பூவின்
வாசனை காற்றுக்குச் சொந்தம்
காற்று எல்லோர்க்கும் சொந்தம்
இப்போது
முதலில் இருந்து
திரும்பவும் இதை
சிரிக்காமல் வாசிக்க முடிகிறதா
என்று பார்

# போதை எனும் அரக்கனை அழிப்போம்...!

அபி
(சாதாரண தர மாணவி)

இன்றைய காலகட்டங்களில் நமது சமுதாயத்தில் சகல விதத்திலும் தனது செல்வாக்கை இந்தப் போதைப்பொருள் பாவனையே செலுத்தி வருகிறது. இன்றைய சமுதாயம் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி தன்நிலை மறந்து திரிகிறது. இந்தப் பயங்கரமான சூழ்நிலை எமது எதிர்காலச் சந்ததியினரையும் தாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் சில செயற்பாடுகள் மூலம் இந்தப் போதைப் பொருள் பாவனையைத் தடுத்து நிறுத்த வேண்டும். முற்றாக ஒழிக்க முடியாது போனாலும் மென்மேலும் வளராமல் கட்டுப்படுத்த வேண்டும்.

அதாவது போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தப் பல்வேறு சட்டதிட்டங்களை அரசின் மூலம் நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும் அரச துறை நிறுவனங்கள் மக்களை விழிப்புணர்வுச் செயற்பாடுகளின் மூலம் விழிப்புணர்வூட்ட வேண்டும். ஆனாலும் இவை யாவும் தற்போது கட்டுக்குள் அடங்காததாக மாறியுள்ளன. இந்த நிலை மாறவேண்டுமெனில் இலங்கைத்திருநாட்டின் ஒவ்வொரு பிரஜையும் போதைப் பொருள் பாவனைக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டியது இன்றியமையாதது.

**போதைப் பொருள் பாதிப்புகள்**

போதைப் பொருள் பாவனையால் எமது நாட்டிலும் மக்களது வீடுகளிலும் பல்வேறு விதமான பாதகமான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. அதிகமான போதைப் பொருள் பாவனையால் பலர் புற்றுநோயை எதிர்நோக்குகின்றனர். சிலர் புற்றுநோயை எதிர்நோக்குவதற்கான ஆரம்ப கட்டத்தில் உள்ளனர். புற்றுநோய்க்குப் பன்னாட்டு ரீதியாக இன்னும் மருந்து கண்டறியப்படாததால் போதைப் பொருள் பாவனையாளர்கள் இறப்பது என்பது நிச்சயமானதொன்றாகும்.

பலர் அங்கவீனர்களாக அதாவது கை, கால்களை இழந்து வாழ்கின்றனர். அதிலும் குறிப்பாகத் தமது வாழ்க்கையைப் போதைப் பொருள் பாவனையின் மூலம் இழந்த இளைஞர்கள் அதிகம் அங்கவீனர்களாக இருப்பதாகப் புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. குடும்பத்தை உழைத்துக் காப்பாற்றவேண்டிய இளைஞர்களைத் தற்போது குடும்பமே காப்பாற்ற வேண்டிய இக்கட்டான சூழ்நிலை எமது நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது.

**அனுப்பி வைக்கப்படும் ஆபத்து**

மேலைத்தேய நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் இத்தகைய போதைப் பொருள்களை அந்த மக்கள் முற்றாகக் கைவிட்டுச் சமாதான சுகவாழ்வை நடாத்தி வருகின்றனர். அத்தகைய மேலைத்தேய நாடுகளின் அரசியல் தங்களது நாட்டை போதைப் பொருள் அற்ற நாடாக மாற்றுவதற்காகத் தமது நாட்டில் தயாரிக்கப்படும் போதைப் பொருட்களை அங்கிருந்து அப்புறப்படுத்திக் கீழைத்தேய நாடுகளுக்குக் கடல் மார்க்கமாக அனுப்பி வைக்கின்றனர். அவர்களது சுயநலத்தால் நமது நாட்டு மக்கள் அபாயகரமான வாழ்வை எதிர்கொண்டு



வருகின்றனர். மேலும் நிகழ்காலத்தில் மட்டுமல்லாது எதிர்காலத்திலும் இந்தப் போதைப் பொருள் பாவனை பாரிய தாக்கங்களை ஏற்படுத்தவுள்ளது.

எனவே எதிர்கால சந்ததியினர் சமாதான சுகவாழ்வை நோக்கிப் பயணிக்கவேண்டுமெனில் இலங்கையில் தற்போதைய காலகட்டத்தில் வாழும் ஒவ்வொரு பிரஜையும் தூரநோக்கோடு செயற்பட்டுப் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டும். போதைப் பொருள் எனும் கொடிய ராட்சசன் எதிர்கால சந்ததியினரின் அமைதியான வாழ்வை ஆட்கொள்ள முதல் நாம் அனைவரும் அதை இயன்றளவில் கட்டுப்படுத்த வேண்டும். போதைப் பொருளை விநியோகிக்க அரசு தடை விதிப்பதோடு மீறி விநியோகிப்பவர்களைக் கைது செய்யவும் வேண்டும். இவ்வாறாகப் போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் விளைவுகளிலிருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டியதும் நமது சமூகத்தைப் பாதுகாக்க வேண்டியும் எமது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

---

## இந்தவார சமையல்





# ஒடியல் கூழ்

ஒடியல் மாவைச் சேர்த்துத் தயாரிக்கப்படும் கூழே ஒடியல் கூழ். இந்தக் கூழுக்குப் பயன்படும் பண்டங்களுடன் ஒப்பிடு கையில் சிறிய அளவில் ஒடியல் மாச் சேர்க்கப்பட் டாலும்கூட ஏனோ அதற்குப் பெயர் ஒடியற் கூழ் என்றே அமைகிறது. அந்தளவுக்கு ஒடியலின் மவுசு இருக்கிறது. அத்தகைய ஒடியற் கூழை ஆக்குவது எவ்வாறு என்று இந்த வாரம் பார்ப்போம்.

**தேவையான பொருட்கள்**

ஒடியல் மா - கால் கிலோ, பூச்சை அல்லது மதனம் மீன் - 1 கிலோ (ஒரு பெரிய மீனை வாங்கித் துண்டுகள் ஆக்குவது ருசியை அதிகப்படுத்தும். அல்லது முள் குறைந்த ஏதாவது மீன்)

நண்டுகள் - 3

இறால் - கால் கிலோ

சின்னக் கணவாய்கள் - 6

கருவாட்டுத் துண்டுகள் - 100 கிராம்

பயிற்றங்காய் - கால் கிலோ

செத்தல் மிளகாய் - 15 (அரைத்தது)

புளி - 100 கிராம்

உப்பு - தேவைக்கேற்ப

**எப்படிச் செய்வது...?**

முதலில் ஒடியல் மாவை ஒரு சிறு பாத்திரத்தில் கொஞ்சம் நீர் விட்டு ஊறவிடுங்கள். அதில் மிதக்கும் தும்புகளை அகற்றி மாவை நன்றாக நீரில் கரையுங்கள். சில மணி நேரம் ஒடியல் மாவை ஊற விடுங்கள். செத்தல் மிளகாயைச் சிறிது நீர் தெளித்து அம்மியில் நன்றாக அரைத்துக்கொள்ளுங்கள். உறைப்பு அதிகமாக இருக்க வேண்டுமானல் மேலும் மிளகாய்கள் சேர்க்கலாம். புளியை ஒரு சிறிய பாத்திரத்தில் கரைத்து வைத்திருங்கள்.

கூழ் காய்ச்சுவதற்கேற்ற பெரிய பாத்திரத்தை எடுத்து (தாச்சி அல்லது பானை) முக்கால்வாசிக்கு நீர் விட்டுக் கொதிக்க வைக்கவும். (கூழில் நிறைய பொருள்கள் போடுவதால் அவை நன்றாக வேகுமளவுக்கு தண்ணீர் அதிகமாய் இருக்க வேண்டும். அதேபோல் பாத்திரமும் பெரிதாக இருக்க வேண்டும்) அதனுள் பயற்றங்காய், சுத்தப்படுத்தி வெட்டிய மீன்துண்டுகள், மீன்தலைகள், நண்டு, இறால், கருவாடு ஆகியவற்றை போட்டு நன்றாக அவிய விடுங்கள்.

அவை அவிந்ததும் ஒடியல் மா (நீரை வடித்துவிட்டு கரைசலான ஒடியல் மாவை மட்டும் எடுக்கவும்.) அரைத்து வைத்துள்ள மிளகாய், கரைத்த புளி என்பவற்றைப் போட்டு கலந்து சுவைக்கேற்ப உப்புச் சேர்த்து குறைந்த நெருப்பில் வைத்து கூழ் தடிப்பானதும் சூடாக இருக்கும்போதே சுவையுங்கள். முடிந்தால் பனையோலை வெட்டியெடுத்துப் பிளா செய்து அதில் ஊற்றிப் பருகிக் கூழின் உன்னத சுவையை உணருங்கள்.

# "உயரதிகாரிகள் களத்தில் நின்றது எமக்கு ஓர்மம் அளித்தது"

மொழியாக்கம்
கமலநாதன்

மேஜர் கீத் வலிகல என்பவர் கொழும்பு - நுகேகொட பகுதியைச் சேர்ந்தவர். 2001 ஆம் ஆண்டில் இலங்கைப் படையில் சேர்ந்தவர். கடற்படை, வான்படை, தரைப்படை ஆகிய மூன்று படைப் பிரிவினருடனும் இணைந்து பணியாற்றும் வகையிலான சிறப்புப் படைப்பிரிவில் சேர்ந்து பயிற்சி பெற்றார். இவரது படையணியில் 150பேர் ஒரே தடவையில் பயிற்றுவிக்கப்பட்டனர். சேர். ஜோன் கொத்தலாவல படைப் பயிற்சிக் கல்லூரியிலும் தியத்தலாவ படைப் பயிற்சிக் கல்லூரியிலும் பயிற்சி பெற்ற இவர் பின்னர் பீரங்கிப் படைப்பிரிவில் பணியாற்றினார். இறுதிப்போர் வரை களத்தில் நின்று புலிகளுக்கு எதிராகப் போரிட்ட இவர் தனது அனுபவங்களை வனசயூரியூப் தளத்தில் கீழ்வருமாறு பகிர்ந்துள்ளார்.

2004ஆம் ஆண்டில் அதிகாரிகளுக்கான பயிற்சியை முடித்த பின் கெமுனு ஹெவா படையணியுடன் (522ஆவது படைப்பிரிவு) முகமாலை நோக்கிச் செல்வதற்காக மீசாலைப் பகுதியில் இறக்கப்பட்டோம். அந்தப் பகுதி எனக்குப் பழக்கப்பட்ட பகுதியல்ல. தாக்குதலின்போது அவசர தேவைகளுக்காகக் குறிப்பிட்ட



இடங்களுக்கு உடனடியாகச் செல்வதே எமது படையணியின் நோக்கமாக இருந்தது.

2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத்தில் முகமாலையில் இருந்த புலிகளின் முன்னரங்க நிலையைக் கைப்பற்றுவதற்காகச் சிறப்புக் காலாட்படை அணி ஒன்றைத் தயார்ப்படுத்தியிருந்தார்கள். மீசாலையிலிருந்து கொடிகாமம், முகமாலை என முன்னேறினோம். முகமாலைப் பகுதி

**புலிகள் வடக்கு நோக்கி மேலும் முன்னேறாதாவாறு தடுப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவேண்டியிருந்தது. அந்தச் சூழலை அவதானித்து நாம் எவ்வாறு நின்றுபிடிப்பது என்பதை அறிந்துகொள்ளவும் அதற்கான வியூகம் அமைக்கவும் எனக்கு 3நாள்கள் தேவைப்பட்டன.**

யைச் சென்றடைந்தபோது அதிகாலை ஒரு மணியாகிவிட்டது. நான் பீரங்கிப் படையணியைச் சேர்ந்தவனாக இருந்தாலும் அந்தப் பகுதி பற்றி எனக்கு எதுவும் தெரிந்திருக்காததால் சிரமங்கள் அதிகம் இருந்தன.

புலிகள் வடக்கு நோக்கி மேலும் முன்னேறாதாவாறு தடுப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவேண்டியிருந்தது. அந்தச் சூழலை அவதானித்து நாம் எவ்வாறு நின்றுபிடிப்பது என்பதை அறிந்துகொள்ளவும் அதற்கான வியூகம் அமைக்கவும் எனக்கு 3நாள்கள் தேவைப்பட்டன. புலிகளின் முன்னரங்க நிலைகளை நோக்கி ஒக்ரோபர் 10ஆம் திகதி முன்னேறத் தொடங்கினோம். தாக்குதலை ஆரம்பிக்க முன்னர் அதற்கான ஒத்திகைகளில் ஈடுபட்டோம். அதன்படி முதலில் முன்னேறும் அணி அந்தப் பகுதியைக் கைப்பற்றியதும் எமது அணி அந்த இடத்தைத் தக்க வைத்துக் கொள்வதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. புலிகள் பாரிய மண் அணைகளை அமைத்து நாம் முன்னேறிவிடாதபடி நிலக்கன்னி வெடிகளையும் பெருமளவில் புதைத்து வைத்திருந்தார்கள். மண் அணையின் மறுபக்கம் அவர்கள் நடமாடவும் உணவு, ஆயுதங்களை வழங்கவும் பயன்படுத்தினார்கள்.

மண் அணையில் 10அடி இடைவெளி ஒன்று இருந்தது. அங்கு படையினரின் நடவடிக்கை இருந்தால் உடனே சுடுவார்கள். அதைத் தடுப்பதற்காக மண் சாக்குகளை அடுக்கி அவற்றை முன்னகர்த்தியபடி முன்னேற வேண்டியிருந்தது. அவ்வாறு முன்னேறியபோது

# மனதைக் கிறங்கடித்த மனோபாலா மறைந்தார்...!

பல படங்களில் நகைச்சுவைத் தொனியுடன் நடித்ததன் மூலம் எமக்குப் பரீச்சயப்பட்டவர் மனோபாலா. அவர் கிட்டத்தட்ட 24 படங்களை இயக்கிய இயக்குநர், தயாரிப்பாளரும்கூட. இவ்வாறாகப் பன்முகம் கொண்டவராக இருந்தாலும் நம்மை ஈர்த்தது என்னவோ அவரது நடிப்பும் பேச்சும்தான். தனது நகைச் சுவைப் பேச்சினால்தான் எமது மனதில் நிறைந்தவர் இப் போது மறைந்து விட்டார்.

பாரதிராஜாவின் 'புதிய வார்ப்புகள்' படத்தின் மூலம் உதவி இயக்குநராக தனது கலைப் பயணத்தைத் தொடங்கிய மனோபாலா 1982-ம் ஆண்டு கார்த்திக் - சுஹாசினி நடிப்பில் வெளியான 'ஆகாய கங்கை'யின் மூலம் தமிழ் சினிமாவில் இயக்குநராக அறிமுகமாகியுள்ளார். விஜயகாந்தை நாய கனாக வைத்து 'சிறைப்பறவை', 'என் புருசன்தான் எனக்கு மட்டும் தான்', 'மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்', ரஜினிகாந்த் நாயகனாக நடித்த 'ஊர்க் காவலன்', சத்யராஜ் நடிப்பில் 'மல்லு வேட்டி மைனர்' என 80களின் முன் னணி நாயகர்களை இயக்கி வெற்றிகண்டார். 'டிசம்பர் 31' என்ற கன் னட படத்தின் மூலமாகவும், 'மேரா பதி சிர்ஃப் மேரா ஹை' (Mera Pati Sirf Mera Uai) ஹிந்தி படம் மூலம் எல்லைகளைக் கடந்து அறியப்பட்டவர் மனோபாலா. அவர் இயக்கத்தில் இறுதியாக கடந்த 2002ஆம் ஆண்டு 'நைனா' படம் வெளியாகியது.

நடிகராக அசத்திய கலைஞன் நடிகராக சிறு சிறு வேடங்களில் நடித்த மனோ பாலாவுக்கு கைகொடுத்தது 'நட்புக்காக' திரைப்படம். அதில் 'மதுரை' என்ற கதாபாத்திரத்தில் மன்சூர் அலிகானுடன் இணைந்து அவர் செய்யும் வில்லத்த னங்கள் கவனம் பெற்றன.'புதிய வார்ப் புகள்' பட பாக்யராஜ் தொடங்கி 'டான்' பட சிவகார்த்திகேயன் வரை 40 வருடங்களுக்கும் மேலா கத் திரைத்துறையில் நடிகரா கக் கவனம் ஈர்த்தார்.



சிறிய கதாபாத்திரமாகவே இருந்தாலும் அதை தனக்கான உடல்மொழியில் ரசிக்க வைத்து விடுவார் மனோபாலா. குறிப்பாக 'எதிர்நீச்சல்' படத்தில் 'பெயரியல் பேரா சன்', 'நியூமராலஜினியின் தந்தை' என்ற பட்டத்துடன் பின் னணியில் 'அண்ணாரின் வெளி நாட்டு பயணங்களின் விவரங்கள்' என குரல் ஒலிக்க துபாய், பாங்காக், அமெரிக்கா என அந்தந்த நாட்டு உடை களுக்கேற்ப சின்ன நடன அசைவுடன் அவரது அந்த தோற்றமே அட்ட காசமாக இருக்கும். அதிலும் 'குங்ஃபூ கலையின் பிறப்பிடமான சீனாவில்' என்று

---

ஆட்லறி, மோட்டார் போன் றவற்றால் தாக்கினார்கள். அதனால் எமது படையில் 60 சிப்பாய்கள் வரை காயப் பட்டார்கள்.

**வெள்ளாங்குளம் தாக்குதல்**

2007ஆம் ஆண்டு டிசம் பர் மாதம் வெள்ளாங்குளம் நோக்கிய தாக்குதலை ஆரம்பித்தோம். திடீரெனப் புலிகளின் 4 பங்கர்களைக் கைப்பற்றினோம். காலை 9.30க்கு ஆரம்பித்த தாக்கு தல் நள்ளிரவையும் கடந்து அதிகாலை 3 மணிவரை நீடித்தது. இத்தாக்குதல் தொடர்ச்சியாகப் 16 மணி நேரம் வரை நடந்ததால் படையினருக்கு அதிக பாதிப் புகள் ஏற்பட்டன. ஆனாலும் காயப்பட்ட சிப்பாய்க ளையோ இறந்த சிப்பாய்க ளின் உடலையோ கைவிட்டு வராமல் அவர்களைப் போர்க் களத்திலிருந்து மீட் டோம். ஏனைய படைப் பிரிவுகளில் கூறப்பட்டது போல "மிஸ்ஸிங் இன் அக் சன்" என்கிற தாக்குதலின் போது தவறியவர்கள் அல் லது காணாமல் போனவர்கள் என்ற விடயம் எமது அணி யில் இருக்கவில்லை.

நாம் கைப்பற்றிய இடங் களைப் புலிகள் திரும்பக் கைப்பற்றிவிடாதபடி தக்க வைத்திருந்தோம். இந்தத் தாக்குதலில் உயரதிகாரி களும் களத்தில் நின்றதால் படையினருக்கு ஓர்மம் அதிகமாக இருந்தது. தடித்த இரும்புத் தகடுகளில் மனித உருவம் வரைந்து வெட்டிச் சிப்பாய்களுக்குச் சூட்டுப் பயிற்சி கொடுத்தோம். 300 மீற்றர் தூரத்துக்குள் இலக் குத் தவறாத தாக்குதல் பயிற்சியே அது. பயிற்சி யின்போது இரண்டு சூடுகள் பிடித்தாலே தகடுகள் பெரிய சத்தத்துடன் கீழே விழும். இது படையினருக்கு உற்சாகத்தைக் கொடுத்தது.

(மிகுதி அடுத்தவாரம்)




சொன்னதும் குங்ஃபூ ஆடை யுடன் அவரது செயல்கள் ரசிக்க வைக்கும்.

சிவாவின் 'தமிழ்ப் படம்' மனோ பாலாவை வேறொரு வகையில் காட்சிப்படுத்தியிருந்தது.

'கலகலப்பு' படத்தில் முறுக்கு மீசை, வேடத்தில் அதகளம் செய்திருப்பார். 'அரண்மனை', 'யாரடி நீ மோகினி', 'துப்பாக்கி', 'சிறு த்தை', 'பிதாமகன்' என ஏராளமான மறக்க முடியாத படங்களில் அழுத்தமான நடிப்பின் மூலம் ரசிக்க வைத்தவர் மனோபாலா.

இயக்கம், நடிப்போடு தன்னை சுருக்கிவிடாமல் 'சதுரங்க வேட்டை' என்ற முக்கியமான திரைப்படத்தையும் தனது தயாரிப்பு நிறுவனமான 'மனோபாலா பிக்சர் ஹவுஸ்' மூலம் வழங்கியவர். 'பாம்புச் சட்டை', அடுத்து தற்போது 'சதுரங்க வேட்டை 2' படங்களின் மூலம் தயாரிப்பாளராக அடையாளம் பெற்றவர். அவரது நகைச்சுவைப் பேச்சும் அதற்கேற்ற உடல்மொழியும் இனி இரசிக்கக் கிடைக்காது என்பது அவரது இரசிகர்களுக்குப் பேரிடியே...!

# ஏன்...?

நட்சத்திரா

# அஃ்படி...?

51

# பெண் புத்தி பின் புத்தி...?

"பெண் புத்தி பின் புத்தி" என்கிற சொல்லாடல் தமிழ்ச் சமூகத்தில் மலிந்த ஒன்று. பெண்களின் செயற்பாடுகள், நடவடிக்கைகள், வேலைகள், காரியங்கள், அவர்தம் எண்ணங்கள் - சிந்தனைகள் என எல்லாமே பின் தங்கியவை என்பதே இதன் உள்ளார்ந்தம். அந்த உள்ளார்ந்தம் பொய்யுமில்லை.

சமூகத்திலோ, குடும்பத்திலோ, அல்லதுபோனால் நிறுவனங்களிலோ எவற்றிலாகினும் பெண்களின் தலைமைத்துவத்தைக் கொண்டிருந்தாலோ, பெண்களின் சொற்கேட்டு இயங்கினாலோ அவை சமூக ஓட்டத்தில் பின் தங்கிவிடும் என்பதும் பின் தள்ளப்பட்டவையாக இருக்கும் என்பதும் கூட உண்மைதான். குடும்பத்தின் தலைமையாளியாகப் பெண் இருப்பாளானால் அந்தக் குடும்பம் முன்னேற்றமான பொருளாதார நிலையை எட்டவும், சமூக மதிப்பைக் கொண்டிருக்கவும் முடியாத நிலையில் இருக்கும் என்பதும் உண்மைதான். இவற்றுக்கெல்லாம் காரணம் என்ன....? ஏன் அப்படிப் பெண் புத்தி பின் புத்தியானது...? உண்மையாகவே பெண் புத்தி பின் புத்தி தானா...?

பெண் புத்தி என்பது பெண்களின் மூளை விருத்தியுடன் தொடர்புடையது. சமூக விருத்தி, சமூக வளர்ச்சி, சமூக அறிவு, சமூக உறவாடல் எனச் சமூகத்துடன் தொடர்புபட்ட பல விடயங்களில் பெண்களை முன்னிறுத்தாத பண்பு பழங்காலத்திலிருந்து எழுதப்படாத சட்டமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதனால் பெண்களுக்கு அவை பற்றிய அறிதல்கள், புரிதல்கள் இருப்பதில்லை. அவ்வாறு அனுபவ அறிவோ, இயல்பறிவோ இல்லாத காரணத்தால் அவர்கள் எடுக்கின்ற முடிவுகள் பின் தங்கியவையாக இருந்தன. அதுவே இயல்பும்கூட. அதில் தவறோ குறையோ இல்லை. ஆண் வர்க்கம் அவ்வாறான சமூக வளர்ப்பை எதிர்கொண்டால் அதன் புத்தியும் பின் தங்கியதாகவே காணப்படும். அவ்வாறில்லாமல் பெண்களை மாத்திரம் மதம், சடங்குகள், பாரம்பரியம் எனப் பல காரியங்களில் புறமொதுக்கப்படுவதால் அவர்களால் முற்றுமுழுதான சமூகத்தை உள்ளடக்கி முடிவுகளை எடுக்கவோ செயற்படவோ முடியாதிருந்தது. அதனாலேயே பெண் புத்தி பின் புத்தி ஆனது.

உதாரணத்துக்கு கள் அருந்தும் கள்ளுத் தவறணையில் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இறப்பு வீடு, இறப்பு வீட்டுச் சடங்குகளில் முன்னிறுத் தப்படுவதில்லை, கோவில் விவகாரங்கள், தொழில் நடவடிக்கைகளில் பெண்களின் மாத விடாயைக் காரணம் காட்டித் தொடக்கு என்று விலக்கும் பண்பிருக்கிறது, இவ்வாறு பல இடங்களில் முன்னிறுத்தப்படாத பெண்களுக்கு அவை சார்ந்த அறிவும் பரீட்சயமும் இருப்பதில்லை. சமூகம் என்பதும் சமூக வளர்ச்சி என்பதும் ஒவ்வொரு செயற்பாடுகள், நடவடிக்கைகளோடும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து இருப்பதால் சகல சமூக அறிவையும் பிரயோகித்துப் பார்க்கின்ற சிந்தனைப் பாய்ச்சலுடனேயே சகல விடயங்களையும் எதிர்கொள்ளவும் முகம்கொடுக்கவும் வேண்டும். ஆனால் எதிலும் முன்னிறுத்தப்படாத பெண்களால் அது முடிவதில்லை. அனைத்திலும் பெண்களைப் பின்தள்ளிவிட்டுச் சிந்தனைப் பாய்ச்சல் இல்லாத மந்த குணம் இருப்பதை முன்னிறுத்தி அதிகம் பேசியதன் எழுச்சியே இந்தப் பின்புத்தி வாக்கியம். பெண்களின் பின் புத்தி பற்றிப் பேசுவோர் அவர்கள் சமூகத்தில் பின்தள்ளப்பட்டிருப்பது குறித்தும் பேச வேண்டும். எப்படியிருப்பினும் இந்தப் பழங்காலச் சொல்லாடல் இன்றைக்கு வீரியம் இழந்துகொண்டிருப்பதே உண்மை.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரைவ். லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.05.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781